சுவிசேஷத்தின் திறவுகோல்கள்

வாழ்க்கையை வளமாக்கும்
வல்லமையான தேவ செய்திகள்

சாம்ஜெபத்துரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

சுவிசேஷத்தின் திறவுகோல்கள்!

(THE KEYS OF THE GOSPEL)

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுபவர்
J. சாம் ஜெபத்துரை
50, [illegible]
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

முதற் பதிப்பு : ஏப்ரல் 1993

நன்கொடை ரூ. 3/-

வெளியீடு எண் : 323

இந்தப் புத்தகத்தை வெளியிட உதவி செய்த
வர்களை வாழ்த்துகிறோம், ஆசீர்வதிக்கிறோம்

Mr. G. T. Samuel & Family

Ipoh, Malaysia

கர்த்தர் சீயோனிலிருந்து அவர்களை
ஆசீர்வதிப்பாராக

அச்சிட்டோர்:

ஓரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே பார்டர் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

சுவிசேஷத்தின் திறவுகோல்கள்!

"பரலோகத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்" (மத் 16:19).

பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உங்களுக்குக் கொடுப்பேன். எத்தனை அருமையான வாக்குத்தத்தம்! எத்தனை உறுதியான வாக்குறுதி! ஆம், இன்றைக்கும் ஒரு விசேஷமான காரியத்தை கர்த்தருடைய கரத்திலிருந்து பெற்றுக்கொள்ளப் போகிறீர்கள்.

வேதத்திலே ஆயிரக்கணக்கான வாக்குத்தத்தங்கள் இருந்தபோதிலும் இந்த வாக்குத்தத்தம் விசேஷமானது ஏனென்றால் இது நித்தியமானது. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன் என்று ஆண்டவர் எத்தனை அன்போடு வாக்களிக்கிறார். அதனுடைய ஆழத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள்!

ஒருவர் உங்களுக்கு ஒரு விலையுயர்ந்த ஒரு புதுக் காரை பரிசு அளிக்கிறார் என்றால் அதற்காக ஒரு பெரிய விழா ஒன்று எடுத்து ஏராளமான மக்களைக் கூட்டி சேர்த்து அவர்கள் முன்னிலைமையில் அந்த காரின் திறவுகோலை கெம்பீரமாக பரிசு அளிப்பார்.

அநேக மக்கள் கைத்தட்டுதலின் மத்தியிலே நீங்கள் மிகுந்த சந்தோஷத்தோடு புறப்பட்டு போய் அந்த காரின் திறவுகோலாகிய சாவியை பெற்றுக்கொள்ளுவீர்கள். அதை பெற்றுக்கொள்ளும்போது அந்த முழுக்காரையும் சுதந்தரித்துக்கொள்ளுவதற்கு அடையாளமாய் விளங்குகிறது.

அதைப்போல ஒரு ஜனதிபதி பெரிய தொழிற்சாலை ஒன்றை திறந்து வைக்க வருகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த தொழிற்சாலையின் திறவுகோலை எல்லாருக்கு முன்பாக அதை நடத்தப்போகிற எக்சிகியூட்டிவ் டைரக்டரின் கைகளில் வழங்குவார். அவர் அந்த திறவுகோலைத் தன் கைகளில் பெற்றுக்கெண்டார் என்றால் அவர் அந்த தொழிற்சாலைக்கு பொறுப்பாளர் ஆகிவிடுவார் என்று அர்த்தம்.

1. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்!

கர்த்தர் இங்கே வேதவசனத்தின் மூலமாய் சொல்லுகிறார். ''இதோ பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்.'' வானத்தின் வாசலைத் திறக்கிற அந்த சாவியை உன்னுடைய கைகளில் கொடுக்கிறேன் என்று அன்போடு அருமையாய் சொல்லுகிறார்.

பரலோகத்தின் திறவுகோல்கள் நம்முடைய கைகளில் கிடைக்கும்போது பரலோகத்தின் வாசலை நாம் திறக்க முடியும். அநேக ஆத்துமாக்களை பரலோகத்திற்கு வழி நடத்துகிற பாக்கியத்தை பெற முடியும். ஆயிரமாயிரமான ஆத்துமாக்களை நித்திய ராஜ்யத்தில் கூட்டி சேர்க்க முடியும். பரலோக ராஜ்யத்தின் திறவுகோல் எத்தனை மேன்மையானது!

தமது பிள்ளைகளுக்கு அவர் வாக்கையும் வல்லமையும் கொடுக்கிறார். அதிகாரத்தையும் ஆளுகையையும் கொடுக்கிறார். ஆவியின் வரங்களையும், கனிகளையும் கொடுக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக மேன்மையான ஒன்றைக் கொடுப்பதாக மத்தேயு 16:19-ல் நாம் வாசிக்கிறோம். அது என்ன?

''அதுதான் பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்கள்!'' பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறார். நாம் வாங்க

ஆவலுள்ளவர்களாய் இருக்கிருேமா? தாகத்தோடு அதை பெற்றுக்கொள்ளுவோமா?

ஜனவரி மாதம் பெரியார் திடலில் ஒரு விசேஷக்கூட்டம் நடந்தது. ஒரு தேவனுடைய மனுஷர் வந்து பிரசங்கிதார். அவரும் நானும் ஒன்ருக ஒரே கல்லூரியில் படித்தவர்கள். அவர் பேசுகிற அந்தக் கூட்டத்திற்கு தலைமைத் தாங்க அன்போடு கேட்டுக்கொண்டார். ஆகவே நான் போய் கூட்டத்தில் அமர்ந்திருந்தேன்.

செய்தி நேரத்தில் திடீரென்று தன் கையில் இருக்கிற மோதிரத்தைப் பாருங்கள் என்று சொன்னுர். எல்லாரும் விசித்திரமாய் அவருடைய கைகளைப் பார்த்தார்கள்.

கையில் இருந்த விலையுயர்ந்த மோதிரத்தைக் காட்டி இது அமெரிக்காவிலிருந்து கொண்டுவந்தேன். என் நண்பர் ஒருவர் எனக்கு பரிசு அளித்தார். விலையுயர்ந்த மோதிரம். இந்த மோதிரத்தில் தானே நேரத்தைப் பார்த்துக்கொள்ள கடிகாரம் இணைக்கப்பட்டிருக்கிறது என்ருர்.

எல்லாரும் ஆச்சரியமாய் அந்த கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர் திடீரென்று இந்த மோதிரம் யாருக்காகிலும் வேண்டுமா? வேண்டுமானுல் வந்து வாங்கிக்கொள்ளுங்கள் என்ருர்.

எல்லாரும் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர வாங்க ஒருவரும் முன்வரவில்லை. அவரோ தொடர்ந்து யாருக்கு இந்த மோதிரம் வேண்டும். வாருங்கள் வந்து இலவசமாய் பெற்றுக்கொள்ளுங்கள் என்ருர்.

ஜனங்கள் ஒருவரும் அசையவில்லை. அவர் கொடுப்பாரோ கொடுக்க மாட்டாரோ முன்னுல் போய் அவமானப் படுவதா அல்லது பெற்றுக்கொள்ளுவதா என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது திண்டுக்கல்லில் இருந்து வந்த ஒரு சகோதரி கூட்டத்தின் மத்தியிலிருந்து திடீரென்று எழுந்தார்கள். மேடைக்கு வேகமாய் ஓடி

வந்தார்கள். மற்ற எல்லாரும் பார்த்துக் கொண்டிருந்த போது அவர்கள் மேடைக்கு வந்து ஊழியரிடம் கையை நீட்டினார்கள்.

அந்த ஊழியர் உடனே தன் விரலில் இருந்த மோதிரத்தைக் கழற்றி கொடுத்து விட்டார்.

அந்தக் கூட்டத்தின் மத்தியிலிருந்து பெரும்பாலானோர் உதடுகளிலிருந்து அடடா அடடா என்ற சத்தம் கேட்டது. அடடா தவறவிட்டுவிட்டோமே இப்படி கொடுப்பார் என்று தெரிந்திருந்தால் நாம் போய் வாங்கி இருந்திருக்கலாமே ஐயோ மோதிரம் போச்சுதே என்று அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

ஒரு ஊழியர் தான் சொன்னதை அப்படியே நிறைவேற்றினார். மோதிரத்தைக் கொடுப்பேன் என்றவர் அப்படியே கொடுத்தார். பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை உனக்குத் தருவேன் என்று வாக்களித்தவர் எவ்வளவு உறுதியாய் தருவார் என்பதை சிந்தித்துப் பாருங்கள். அவர் பொய்யுரைக்க ஒரு மனிதனும் அல்ல. மனம் மாற ஒரு மனுபுத்திரனும் அல்ல. அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ என்று வேதம் கேட்கிறது.

நாம் பரலோகத்திற்கு போகும்போது பூமியில் வல்லமையாய் ஊழியம் செய்த ஊழியக்காரர்களை எல்லாம் பார்ப்போம். அவர்கள் அதிகாரத்தையும், வல்லமையையும், ஆளுகையையும் பெற்று எப்படி ஆயிரமாயிரமான ஆத்துமாக்களை கர்த்தரண்டை வழி நடத்தினார்கள் என்பதை எல்லாம் நாம் அறிந்துகொள்ளுவோம்.

அப்பொழுது நாமும்கூட அடடா நாமும் கர்த்தரிடத்திலே வரங்களை வாங்கி இருக்கலாமே. வல்லமையுள்ளவர்களாய் ஜீவித்திருக்கலாமே. சுவிசேஷத்தின் கிருபைகளை வாங்கி கிராமங்களைச் சந்தித்து இருக்கலாமே. தீர்க்க

தரிசன வரத்தைப் பெற்று அநேகருக்கு ஆறுதல் அளித்து இருக்கலாமே என்றெல்லாம் நினைக்கக் கூடியதாய் இருக்கும்.

பழங்காலத்தில் பாடல் ஒன்று உண்டு. அதைப் பாடும்போதெல்லாம் ஒரு துக்கம் என் இருதயத்தைத் தொடும். அது என்ன பாடல் தெரியுமா?

''ஆத்மா ஒன்றும் இரட்சிக்காமல் வெட்கத்தோடு ஆண்டவா, வெறுங்கையனாக உம்மை கண்டுக்கொள்ளல் ஆகுமோ?'' என்பதே அந்தப் பாடல்.

கர்த்தரை வெறுங்கையாக அல்ல ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களோடு சந்திக்கும்படி நமக்கு பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்கள் அவசியம்.

கர்த்தர் அந்த திறவுகோல்களைக் கொடுக்கப் பிரியப் படுகிறார். கர்த்தர் உங்களை பயன்படுத்த பிரியப்படுகிறார். உங்களை அக்கினிஜுவாலையாக மாற்ற பிரியப்படுகிறார். உங்களுக்கு பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களைத் தருகிறேன் என்று அவர் எத்தனை அன்போடு சொல்லுகிறார் பாருங்கள்.

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களைப் பார்த்து கர்த்தர் அப்படி சொல்லவில்லை. நோவா கர்த்தருடைய வார்த்தையின்படி அழகான பேழையைக் கட்டினார். அவருக்கு பரலோக ராஜ்யத்தின் திறவுகோலை வாக்குப்பண்ணவில்லை. தேவனோடு நடந்த ஆபிரகாமுக்கு அந்த பாக்கியம் கிடைக்கவில்லை. இஸ்ரவேலருக்கு நியாயப் பிரமாணம் கொடுத்த மோசேக்கு அந்த திறவுகோல் கிடைக்கவில்லை. ஏசாயா, எரேமியா, எசேக்கியா போன்ற தீர்க்கதரிசிகளுக்கு அந்த மேன்மை கிடைக்கவில்லை. ஒரு ஆசாரியனுக்காவது, ஒரு ராஜாவுக்காவது கர்த்தர் அப்படி பரலோகத்தின் திறவுகோலை வாக்கு அளிக்கவில்லை.

இயேசு சொன்னார் ''பரலோகத்திற்கு ஏறினவன் ஒரு வனும் இல்லை'' என்றார். ஆம், பழைய ஏற்பாட்டு பரிசுத்த வான்களுக்கு பரலோக ராஜயத்தின் திறவுகோல்களைப் பெறுகிற பாக்கியம் கிடைக்கவில்லை. ஏனென்றால் வானம் அவர்களுக்கு மூடப்பட்டிருந்தது.

யாக்கோபு சொப்பனம் கண்டபோது பூமிக்கும் வானத்துக்கும் ஏணி வைக்கப்பட்டிருக்கிறதைக் கண்டார். ஆனால் அந்த ஏணியில் எந்த மனிதனும் ஏறி செல்கிறதை அவர் பார்க்கவில்லை. தேவதூதர்கள்தான் ஏறுகிறவர்களாகவும், இறங்குகிறவர்களாகவும் இருந்தார்கள். பரலோக திறவுகோல் மனிதனுடைய கைகளில் கொடுக்கப்படாததினால் ஏறி வா என்று அழைக்கும் சத்தம் பரலோகத்திலிருந்து மனிதனுக்குக் கிடைக்கவில்லை.

ஆனால் இயேசு கல்வாரி சிலுவையிலே ஆணிகள் கடாவப்பட்டு இரத்தம் சிந்தி நமக்கு பரலோக ஏணியாய் மாறினார். அவரே பரலோகத்திற்கு வழியும் சத்தியமும் ஜீவனுமானவர். அவரே பரலோகத்தின் திறவுகோல்களை தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுக்க ஆவலுள்ளவர்.

இயேசு பரலோகத்திற்கு ஏறி சென்றபோது வானத்தின் வாசல்கள் அவருக்கு திறவுண்டன. பரலோக கதவுகள் அவருக்குத் திறந்தன.

சங்கீதக்காரன் அதைப்பற்றி எழுதும்போது: ''வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்' என்று எழுதுகிறார் (சங் 24:9).

பரலோகத்திலிருந்து இறங்கி வந்த தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து ஒருவரே, பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நமக்குத் தர வல்லமையுள்ளவர்.

தேவபிள்ளையே, சற்று சிந்தித்துப் பார். கர்த்தர் தேவதூதர்களை நம்பி தம்முடைய திறவுகோலை அவர்களுடைய

கைகளில் கொடுக்கவில்லை. தேவ தூதர்கள் பலமுள்ளவர்கள்தான், ஞானமுள்ளவர்கள்தான், அழகுள்ளவர்கள்தான், பலசாலிகள்தான், கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு அதன்படி செய்கிற சாதுரியமுள்ளவர்கள்தான். படை தளபதிகளைப்போல பெரிய மிகாவேல் இருந்தது உண்மைதான். கர்த்தருடைய செய்திகளை சுமந்து செல்லுகிற கேபிரியேல் தேவதூதன் இருந்தது உண்மைதான்.

ஆனால் பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை அவர் அந்த தேவதூதர்களுக்கோ அல்லது பிரதான தேவதூதர்களுக்கோ கொடுக்கவில்லை. ஏழைகளாகிய நம்மைப் பார்த்து அவர் அன்போடு சொல்லுகிறார் பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்.

எல்லோரும் கைகளை உயர்த்தி கொஞ்ச நேரம் தேவனை ஸ்தோத்தரிப்போமாக. தேவதூதர்களைப் பார்க்கிலும் நம்மை மேன்மையாய் கண்ட ஆண்டவருக்கு மகிமை செலுத்துவோமா? பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்குக் கிடைக்காத பாக்கியத்தை நமக்குத் தந்தபடியினால் நாம் அவரை முழு இருதயத்தோடு ஆராதிப்போமா?

பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை கண்களுக்கு முன்பாக சிந்தித்துப் பாருங்கள். உங்களுடைய கைகளில் ஆண்டவர் தருகிறதை உங்களுடைய விசுவாச கண்கள் காணட்டும். அந்த திறவுகோல் எவ்வளவு விலைமதிப்பு உள்ள திறவுகோல் எவ்வளவு பாக்கியமான திறவுகோல். இதை கர்த்தருடைய கரம் நம்முடைய கைகளில் கொடுக்கும்போது அவருடைய கண்கள் எவ்வளவு பெரிய காரியத்தை நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கும்.

என் மகனே, மகளே, விலை உயர்ந்த இந்த திறவுகோலை உன் கைகளில் கொடுக்கிறேன். இந்த சுவிசேஷத்தின் திறவுகோலை உன்னை நம்பி உத்தரவாதமாக உன் கைகளில் கொடுக்கிறேன். நீ இப்பொழுது பரலோக

மாத்திரத்தில் திருவசனங்களை பெற்றுக்கொள்ள தகுதியுள்ளவனாகவும் விளங்கவேண்டும். கர்த்தருடைய நம்பிக்கைக்கு பாத்திரவானாகவும் காணப்படவேண்டும். நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தாய் நான் உன்னை அநேகத்தின் மேல் அதிகாரியாக வைப்பேன். கர்த்தருடைய நம்பிக்கைக்கு பாத்திரவானாகவும் இன்று முதல் நீ விளங்க வேண்டும்.

கர்த்தர் பில்லிகிரஹாமை அழைத்தபோது அவர் நம்பிக்கைக்கும் பாத்திரவானாகவும் கண்டார். அப்பொழுது அவர் பதினொரு வயதுடைய வாலிபனாகவும் இருந்தார். ஒரு நாள் விளையாட்டு மைதானத்தில் தன்னுடைய நண்பர்களோடுகூட கால்பந்தாடிக்கொண்டிருந்தார். கர்த்தர் தமது சுவிசேஷத்தின் திருவசனங்களை பில்லிகிரஹாமின் கைகளில் கொடுக்க ஆசைப்பட்டு அவரோடு இடைபடலானார்.

கால்பந்தாட்ட மைதானத்தில் பில்லிகிரஹாம் விளையாடிக் கொண்டிருக்கும்போது தேவ ஆவியானவர் பில்லிகிரஹாமின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். ஒரு ஆழமான பாரத்தை அவருடைய உள்ளத்தில் வைத்தார்.

விளையாட்டு முடிந்தது. பில்லிகிரஹாமோடு விளையாடின விளையாட்டு வீரர்கள் எல்லாம் அவரைப் பார்த்து வாருங்கள் நாம் சந்தோஷமாய் ஹோட்டலிலே போய் சாப்பிட்டு விட்டு வீடு செல்லலாம் என்று அழைத்தார்கள்.

ஆனால் பில்லிகிரஹாம் கர்த்தருடைய ஆவியானவர் தம்மோடு இடைபட விரும்புகிறதை அறிந்து தன் நண்பர்களைப் பார்த்து, "நீங்கள் வீட்டுக்கு போகலாம் நான் கொஞ்ச நேரம் கர்த்தரோடு தனித்திருக்க விரும்புகிறேன்" என்று சொன்னார்.

நண்பர்கள் சென்ற பிறகு பில்லிகிரஹாம் அந்த கால் பந்து மைதானத்தில் முழங்கால்படியிட்டார். அது ஒரு மாலை நேரம்; இருள் சூழுகிற வேளை. பில்லி கிரஹா முடைய உள்ளமோ கர்த்தரின்மேல் ஆவலும் தாகமும் கொண்டிருந்தது.

சிலுவையில் அறையப்பட்ட தேவகுமாரனுக்கு முன் பாக தன் கண்களை ஏறெடுத்து ஒரு வார்த்தையை திரும் பத் திரும்ப சொன்னார், ''ஆண்டவரே நீர் என்னை நம்பும், ஆண்டவரே நீர் என்னை நம்பும். என்னை உம்முடைய நம்பிக்கைக்கு பாத்திரவானாய் மாற்றும்'' என்று ஜெபம் பண்ணினார்.

ஏறக்குறைய ஒரு மணி நேரம் முழங்காலிலே அந்த மைதானத்தில் நடந்து தன் சரீரத்தில் வேர்வை சொட்ட சொட்ட அவர் முழங்காலில் இருந்து, கண்ணீர் வடிய ஆண்டவரைப் பார்த்து, ''தேவனே நீர் என்னை நம்பும்'' என்றார்.

ஆம். கர்த்தர் உடனே பரலோகத்தின் திறவுகோலை அவருடைய கைகளில் கொடுத்தார். இன்று வரையிலும் அவருடைய ஊழியம் அதிகமதிகமாய் பெருகிக்கொண்டே இருக்கிறது. இன்றைக்கு அவருடைய ஊழியத்தின் மூலம் ஆயிரக்கணக்கான மக்களை பரலோகத்திற்கு நடத்துகிற பாக்கியத்தை பெற்றிருக்கிறார்.

ஆண்களின் கைகளில்தான் கர்த்தர் பரலோக ராஜ்யத் தின் திறவுகோலை கொடுப்பாரா? ஸ்திரீகளை அவர் பயன் படுத்த மாட்டாரா? நிச்சயமாகவே அவர் பயன்படுத்து வார். அவருக்கு ஆண் என்றும் பெண் என்றும் இல்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா தேசத்தில் கேத்தரின் குல்மேன் என்ற ஒரு சகோதரி இருந்தார்கள். அவர்கள் மேலிருந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மிகவும் விசேஷமாய் இருந்தது. இந்த நூற்றாண்டில்

கர்த்தரால் பயன்படுத்தப்பட்ட ஊழியர்களில் அவர்களும் ஒருவர்.'

அவர்கள் நின்று பேச ஆரம்பித்தால் அந்த இடம் முழுவதும் அபிஷேகத்தின் வல்லமை அலையலையாய் மோதும். தெய்வீக அன்பு கரைபுரண்டு ஓடும். கிறிஸ்து வினுடைய பிரசன்னத்தை எல்லாராலும் உணர்ந்து கொள்ள முடியும். தீர்க்க முடியாத நோய், கேன்சர், ஆஸ்துமா போன்றவைகள் எல்லாம் இமைப்பொழுதில் குணமாகும். சுகமளிக்கிற ஒரு அன்பின் ஊழியத்தை அவர்களுக்குக் கொடுத்திருந்தார்.

அந்த சகோதரி மரித்த பின்பு ஞாபகார்த்தக் கூட்டத்தில் பேசிய ஒரு தேவனுடைய ஊழியர் சொன்னார், "கர்த்தர் இந்த சகோதரியை வல்லமையாய் பயன்படுத்தியதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை அவருடைய கைகளில் கொடுத்ததற்கு ஒரு இரகசியம் உண்டு. அது என்ன தெரியுமா? கர்த்தர் அவர்கள் மேல் வைத்த நம்பிக்கைதான். கர்த்தர் அவர்களை நம்பினார். அவர்கள் கர்த்தருக்கு நம்பிக்கை துரோகம் செய்யவில்லை."

சகோதரனே, சகோதரியே, கர்த்தர் உன்னைக் குறித்து அப்படி நம்பிக்கை வைப்பாரா? நீ நம்பிக்கைக்கு பாத்திர வானாய் நடந்துக்கொள்ளுவாயா? இந்த நாளில் பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை உன் கைகளில் கொடுக்க கர்த்தர் பிரியப்படுகிறார். கர்த்தர் உன்னை பயன்படுத்தப் போகிறார். அறியப்படாத உன்னைக்கொண்டு தேசத்தை அசைப்பார். ஞானம் இல்லாத உன்னைக்கொண்டு ஆயிர மாயிரமான மக்களை இரட்சிப்பிற்குள் வழி நடத்துவார். கர்த்தருடைய நம்பிக்கைக்குப் பாத்திரவானாய் நடந்து கொள்வாயா?

ஒருவேளை இதுவரையிலும் நீ நம்பிக்கையில்லாமல் வாழ்ந்து இருப்பாயானால் வரங்களைப் பெற முடியாதபடி

தண்ணீரைப் போல தழும்பிக் கொண்டிருப்பாய் என்ருல் இன்றைக்கு கர்த்தருடைய கரத்தில் உன்னே அர்ப்பணி ஆண்டவரே என்னே நம்பும் என்னே உமது பார்வைக்கு நம்பிக்கையுள்ளவனுய் மாற்றும் என்று கதறு. கர்த்தர் தமது அபிஷேகத்தை உன்மேல் ஊற்றி உன்னேத் திடப் படுத்தியருளுவார். பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களே நான் உனக்குக் கொடுக்கிறேன் என்று கர்த்தர் சொல்லு கிருர்.

நான் மிகவும் நேசிக்கிற ஊழியர்களுள் டாக்டர் கிளிபோர்டு குமார் அவர்களும் ஒருவர். அவரோடு பல இடங்களுக்கு ஒன்ருய், ஒருமனமாய் ஊழியத்திற்கு சென் றிருக்கிறேன். தேவ அன்பால் நிரப்பப்பட்டிருக்கிற அவர் மிக எளிதாக கல்விமான்களேயும், செல்வந்தர்களேயும் கர்த்தரிடத்தில் வழி நடத்திவிடுவார். அதன் இரகசியத்தை நான் அவரிடம் விசாரித்தேன்.

ஒரு முறை அவர் சென்னேயிலுள்ள அண்ணுநகரில் ஜெபத்திற்காக ஒரு வீட்டிற்கு சென்றிருந்தார். அங்கே விசேஷ தீர்க்கதரிசனமுடைய ஒரு சகோதரி இலங்கையில் இருந்து வந்திருந்தார்கள்.

ஜெப நேரம் வந்தது. எல்லாரும் ஊக்கமாக ஜெபித் துக் கொண்டிருந்த நேரம் அது. இலங்கையில் இருந்து வந்த அந்த சகோதரி அவருக்கு நேராய் தன் கரத்தை நீட்டி தீர்க்கதரிசனமாக மகனே, இதோ உன் கையில் ஒரு திறவுகோலேத் தருகிறேன். பெரிய செல்வந்தர்கள், கல்விமான்களின் இருதயத்தை கர்த்தர் பக்கமாய் திருப்பும் படி இந்த திறவுகோலே பெற்றுக்கொள் என்று உரைத் தார்கள்.

உடனே அவரும் தன்னேத் தாழ்த்தி பயப்பக்தியோடு அந்த திறவு கோலே வாங்கிக்கொள்ளும் பாவனேயில் தன் கைகளே நீட்டினர். அந்த சகோதரியும் கொடுப்பதைப் போல கொடுத்தார்கள்.

அன்று முதல் அவரிடத்தில் ஆவியின் வரங்கள் தங்கிற்று. மற்றவர்கள்மேல் கைகளை வைத்து ஜெபிக்கும் போது அசுத்த ஆவிகள் அலறின. ஒவ்வொருவருடைய பிரச்சனைகளுக்கான தீர்வையும் கர்த்தர் தரிசனத்தின் மூலம் அவருக்கு வெளிப்படுத்தலானார். கர்த்தர் கொடுத்த அந்த திறவுகோலின் மூலம் ஏராளமான ஆத்துமாக்களை கர்த்தரண்டை திருப்ப முடிந்தது.

தேவபிள்ளையே, அந்த தேவன் பட்சபாதம் உள்ளவர் அல்ல. ஒருவருக்கு ஆவியின் வரங்களாகிய திறவுகோல்களைக் கொடுத்துவிட்டு மற்றவர்களுக்கு மறுக்கிறவர் அல்ல கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான் என்று வேதம் சொல்லுகிறது. நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்.

இப்பொழுது நீங்கள் தேவனுடைய பிரசன்னத்திற்கு முன்பாக நின்றுகொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய இருதயத்தை தேவ அபிஷேகத்திற்கு முன்பாக நிறுத்தி ஆண்டவரே என்னை நம்பும். பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை எனக்குத் தந்தருளும் என்று தாழ்த்தி ஜெபியுங்கள். இப்பொழுதே நீங்கள் பெற்றுக்கொள்ளுவீர்கள்.

அன்றைக்கு பேதுருவைப் பார்த்து பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களைத் தருவேன். பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று சொன்னார்.

தேவபிள்ளையே, இது உன்னுடைய நேரம். நீ கர்த்தருக்காக எரிந்து பிரகாசிக்க வேண்டிய ஒரு நேரம். எலியாவின் ஆவியோடும் பெலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடக்க வேண்டிய ஒரு நேரம். எலியாவின்மேல் இருந்த அபிஷேகத்தை கர்த்தர் இன்று உனக்குத் தருகிறார்.

பேதுரு மேல் இருந்த வல்லமையைக் கேளுங்கள். பேதுருவின் நிழல்பட்ட வியாதியஸ்தர்கள் சுகமானார்களே. அப்போஸ்தலனாகிய பவுலின் உறுமால்களின் மேலும் கச்சைகளின் மேலும் தேவனுடைய வல்லமை இருந்ததே! கர்த்தர் அந்த வல்லமையை இப்பொழுதே உங்களுக்குள் கொடுக்க கிருபையுள்ளவராக இருக்கிறார். பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குக் கொடுப்பேன் என்று அவர் வாக்களிக்கிறார்!

இன்றைக்கு உலகத்திலே தலைச் சிறந்த சுவிசேஷகர் யார் என்றால் ரீன்கார்டு போங்கே அவர்களைத்தான் சொல்லுவேன். அவர் ஜெர்மனி தேசத்தில் பிறந்தவர். அவர் சிறுவனாயிருக்கும்போதே கர்த்தருடைய நம்பிக்கை அவர் மேல் வந்தது.

கர்த்தர் அவருக்கு ஆப்பிரிக்காவைக் குறித்த தரிசனத்தைக் கொடுத்தார். ஆப்பிரிக்கா தேசத்தை சிலுவையின் அடிவாரத்தில் பார்த்தார். கோடிக்கணக்கான ஆப்பிரிக்கா மக்கள் புழுக்களைப்போல நெளிந்து கொண்டிருந்ததைக் கண்டார்.

சிலுவையிலிருந்து கிறிஸ்துவின் இரத்தம் அந்த தேசத்தின் மக்களின்மேல் விழுவதைக் கண்டார். கர்த்தர் சொன்னார் இரத்தத்தினால் கழுவப்பட்ட ஆப்பிரிக்காவை நான் உனக்குத் தரப்போகிறேன். அப்படியே கர்த்தர் அவரைக் கொண்டு இப்பொழுது ஆப்பிரிக்கா தேசத்தை அசைத்துக் கொண்டு வருகிறார்.

அவர் ஆப்பிரிக்காவில் பேசிய பல வீடியோக்களை நான் பார்த்தேன். பத்து லட்சம் மக்கள் கண் எட்டும் திசையில் எல்லாம் நிரம்பி இருந்தார்கள். அதில் அவர் பிரசங்கித்தபோது ஒரேக் கூட்டத்தில் மாத்திரம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள்.

அவர் அந்தக் கூட்டத்தின் மத்தியிலே பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லி ஊதிய

போது தேவனுடைய அபிஷேகம் அந்த இடம் முழுவதை யும் நிரப்பிற்று. தேவனுடைய வல்லமையைத் தாங்க முடியாமல் ஆயிரக்கணக்கான மக்கள் அப்படியே மெய் மறந்து சரிந்து விழுந்தார்கள்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த என்னுடைய உள்ளம் உடைந்தது. கர்த்தருக்கு முன்பாக சாஷ்டாங்க மாய் முகங்குப்புற விழுந்தேன். இந்தியாவைக் குறித்த பாரம் என் உள்ளத்தை அழுத்தியது. ஆண்டவரே இந்தி யாவில் வலது கைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் அறியாத எண்பது கோடி மக்கள் உண்டே அவர்களை எல்லாம் கர்த்தருக்குள் வழி நடத்த எவ்வளவு காலமாகும்? ஒருக் கூட்டத்தில் ஒரு லட்சம் மக்களை ஆதாயப்படுத்தினு லும் இந்தியாவை ஆதாயப்படுத்த பல மாதங்கள் செல் லுமே என்று எண்ணி ஆண்டவரே என்னை நம்பும் இந்த தேசத்தை உமக்கு நேராய் வழி நடத்த உதவி செய்யும் என்று கதறினேன்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, கர்த்தர் உங்களை அனுப்பும்போது வெறுங்கையாய் அனுப்புவது இல்லை. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை உங்களுக் குத் தந்து உங்கள் மூலம் தேசத்தை அசைக்கப் பிரியப்படு கிறார். சுவிசேஷத்தின் வல்லமையை உங்கள் மேல் ஊற்றி கர்த்தரே ஜீவனுள்ள தேவன் என்று நிரூபிக்க உங்களை வழி நடத்துகிறார்.

இயேசுகிறிஸ்து பேதுருவிடம் பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களைத் தருவேன் என்று சொன்ன அந்த பின்ன ணியை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

ஒருநாள் இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் மனம்திறந்து பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென்று இரண்டு கேள்விகளைக் கேட்டார். முதல் கேள்வி ''என்னை யார் என்று ஜனங்கள் சொல்லுகிறார்

கள்?'' (மத் 16:13). இரண்டாவது நான் யார் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள் என்றார் (மத் 16:15).

அதற்கு அவர்கள் சிலர் உம்மை யோவான் ஸ்நானகன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் எரேமியா என்றும் சொல்லுகிறார்கள் எனறார்கள்.

அப்பொழுது சீமோன் பேதுரு ஆண்டவரை நோக்கி, ''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' என்றார்.

நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சொன்ன உடனே அந்த வார்த்தை கிறிஸ்துவினுடைய இருதயத்தை மகிழப்பண்ணியது.

உடனே கர்த்தர் பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை எடுத்து பேதுருவுக்குக் கொடுக்கச் சித்தமானார். ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார் என்று சொல்லி கர்த்தர் பேதுருவின் கைகளில் திறவுகோல்களைக் கொடுத்தார்'' (மத் 16:17).

தேவபிள்ளையே, இயேசு கிறிஸ்துவைக் குறித்து உனக்கு இருக்கும் தரிசனம் என்ன? அவரை யார் என்று நீ எண்ணுகிறாய்? எந்தவிதத்திலே அவரை மதிப்பிடுகிறாய்? அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்ற தரிசனம் உனக்கு இருக்கிறதா?

அப்படி தரிசனம் இருக்கும் என்றால் அவரைத் துதித்து சொல்லுங்கள் ''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன், நீர் ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா, நீரே சூரியன், சந்திரன், நட்சத்திரங்களை எல்லாம் சிருஷ்டித்தவர் உமக்கு ஒப்பானவர் ஒருவரும் இல்லை. நீர் சேனைகளின் கர்த்தர், மகிமையின் ராஜா, மகத்துவமுள்ளவர்; மகிமை

யுள்ளவர், மரணத்திலிருந்து உயிரோடு எழுந்தவர் என்றெல்லாம் சொல்லி அவரைப் போற்றி துதிப்பீர்களா?

பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை வாங்கி, பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பது எத்தனை பாக்கியமான காரியம். ஆதாம் ஏவாளின் காலத்திலிருந்தே அந்த பரலோக வாசல் மூடப்பட்டுக் கிடந்தது. ஆதாமின் பாவங்கள் பரலோக வாசலின் அருகிலே செல்ல முடியாமல் அவர்களைத் தடுத்தது. மட்டுமல்ல, பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்கள் அவர்களுடைய கைகளில் இல்லை.

ஆனால் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவே உன்னதங்களுக்கு ஏறி பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களைப் பெற்றுக் கொண்டார். அவர் ஒருவரே நமக்கு அந்த திறவுகோல்களைத் தர வல்லமையுள்ளவராக இருக்கிறார்.

தேவபிள்ளையே, நீ எப்போதும் கர்த்தரைத் துதிக்கும் போது ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சொல்லி அவரைப் போற்றி துதிப்பாயா? துதிகளில் அவர் பிரியப்படுகிறார். கர்த்தரை மகிமைப்படுத்தின பேதுரு பரலோக ராஜயத்தின் திறவுகோல்களை பெற்றுக் கொண்டார்.

பேதுருவினுடைய வாழ்க்கையிலே இந்த வாக்குத்தத்தம் எவ்விதமாய் நிறைவேறியது தெரியுமா? நீங்கள் வேதத்தை திறந்து வாசித்துப் பார்த்தால் ஒவ்வொரு முறையும் பேதுரு பிரசங்கித்தபோது மூவாயிரம் ஐயாயிரம்பேர் என்று ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள். பேதுருவினுடைய முதல்நாள் பிரசங்கம் பெந்தெகொஸ்தே நாளில் செய்தபோது மூவாயிரம்பேர் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் என்று அப் 2:41-ல் வாசிக்கிறோம். அடுத்த முறை அவர் பிரசங்கித்த போது வசனத்தைக் கேட்ட விசுவாசிகளின் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாக இருந்தது (அப் 4:4).

ஒவ்வொரு முறை பேதுரு பிரசங்கித்தபோதும் மகிமையான அறுவடை நடந்தது. ஒவ்வொரு முறையும் திரளான ஜனங்கள் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை ஏந்தி இருந்த அவர் ஆயிரமாயிரமான மக்களை பரலோக வாசலுக்கு நேராய் வழி நடத்தினார். கிறிஸ்துவை பிரசங்கித்தபோது அவர்களுடைய பெயர்கள் பரலோகத்திலே ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டது.

சில ஆண்டுகளுக்கு பிறகு அப்போஸ்தலனாகிய யோவான் பரலோகத் தரிசனத்தைக் கண்டபோது பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன் என்று குறிப்பிடுகிறார் (வெளி 19:1).

தேவபிள்ளையே, உன்னுடைய ஊழியம் கனியுடையதாக இருக்கிறதா? உன் ஊழியத்தில் எல்லாம் போதுமான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவில்லையோ? யாரையும் பரலோக ராஜ்யத்திற்கு பங்காளிகளாக்கவில்லையோ?

இன்று கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக முழங்கால்படியிட்டு ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவே, பரலோக ரா்ஜ்யத்தின் திறவுகோல்களை எனக்குத் தாரும் என்று கண்ணீரோடு கேட்பாயா? விசுவாசத்தோடு கேள். விடாப் பிடியாய் கேள். கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான். இன்றைக்கே கர்த்தர் பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை உனக்குத் தந்தருளுவார்.

2. தாவீதின் வீட்டின் திறவுகோல்!

இரண்டாவதாக, கர்த்தர் நமக்கு தாவீதின் வீட்டின் திறவுகோலை வாக்குப் பண்ணுகிறார். ஏசாயா 22:22-ஐ வாசித்துப் பாருங்கள். தாவீதினுடைய வீட்டின் திறவுகோலை அவன் தோளின்மேல் வைப்பேன்; ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு அவன் திறப்பான், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்கு அவன் பூட்டுவான்.

இதனுடைய கருத்து என்ன? இதனுடைய ஆழம் என்ன? தாவீதின் வீட்டின் திறவுகோல் என்றால் அது எதைக் குறிக்கிறது?

நம் தேவன் தாவீதின் குமாரன் என்று அழைக்கப் பட்டார். புதிய ஏற்பாட்டில் முதல் புஸ்தகம், முதல் அதி காரத்தில், முதல் வசனத்திலே ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்து என்று அழைக்கப் பட்டிருக்கிறது (மத் 1:1).

நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் என்றார் (வெளி 22:16). தாவீதின் திறவுகோலை உடையவரும் அவரே (வெளி 3:7).

கர்த்தருடைய பெயர்களில் ஒரு பெயர் தாவீதின குமாரன் எனப்படுவது. பிறவி குருடன் அவரை அன் போடு அழைத்து, ''தாவீதின் குமாரனே'' எனக்கு இரங் கும் என்று கேட்டபோது உடனே அவர் மனதுருகி அவனை சொஸ்தமாக்கினார். அவனுக்கு பார்வையை மீண்டும் தந்தார்.

வேதத்திலே ஏராளம் பக்தர்கள் இருந்தபோதிலும், கர்த்தர் தாவீதோடு நிரந்தரமான உடன்படிக்கை செய் தார். தாவீதை அளவில்லாமல் நேசித்தார்.

தாவீது சிறியவனாக இருந்தபோது ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். ஆடுகள் பின்னால் நடந்து வனாந்திரத் தில் சஞ்சரித்து, சிங்கங்களுக்கும், கரடிகளுக்கும் பயந்து வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்த தாவீதை கர்த்தர் நேசித்து, நம்பி அழைத்துக்கொண்டு வந்து முழு இஸ்ர வேலர்கள் மேலும் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்.

மாத்திரமல்ல, கர்த்தர் தாவீதோடு ஒரு உடன் படிக்கை செய்து உனக்கு நிலையான ஒரு வீட்டை கட்டு வேன். உன்னுடைய குமாரர் தலைமுறை தலைமுறையாக என்றென்றைக்கும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார் கள் என்று ஆசீர்வதித்தார்.

தாவீதின் வீட்டை ஆசீர்வதித்தபோது தாவீதுடைய உள்ளம் பரவசம் அடைந்தது. இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படிக்கு, அதை ஆசீர்வதித்தருளினீர். கர்த்தராகிய தேவரீர் அதை ஆசீர்வதித்தபடியினால், அது என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்றான் (I நாளா 17:16-27).

தாவீதின் வீடு எத்தனை மேன்மையாய் மகிமையாய் ஆசீர்வதிக்கப்பட்டது என்பதை கவனித்தீர்களா? உங்கள் குடும்பமும் அவ்வாறே ஆசீர்வதிக்கப்படும். தாவீதின் வீட்டின் திறவுகோலை நான் உங்களுக்கு தருவேன் என்று கர்த்தர் வாக்குப் பண்ணியிருக்கிறாரே.

தாவீதின் வீடு இவ்வளவாய் ஆசீர்வதிக்கப்பட்டதன் காரணமென்ன? தேவன் ஏன் தாவீதின் வீட்டோடு உடன்படிக்கை நித்தியமாய் செய்தார்? சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்தப் பகுதியை நான் உங்களுக்கு விளக்கிச் சொல்லப் பிரியப்படுகிறேன்.

ஒரு முறை தாவீதை சந்திக்க தீர்க்கதரிசியாகிய நாத்தான் வந்தபோது தாவீது மனந்திறந்து தீர்க்கதரிசியோடே, ‘‘பாரும், நான் கேதுரு மரவீட்டிலே வாசம்பண்ணுகிறேன்; கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியோ திரைகளின் கீழ் இருக்கிறது’’ என்றான் (I நாளா 17:1).

ஆம், தாவீதின் உள்ளம் கர்த்தருடைய ஆலயத்திற்காய் ஏங்கினது. கர்த்தர் தன்னுடைய மத்தியிலே வாசம் செய்ய வேண்டும். இஸ்ரவேல் மக்கள் மத்தியிலே எழுந்தருள வேண்டும் என்பதே தாவீதின் ஆசையாயிருந்தது.

மோசேயோடு கர்த்தர் பேசும்போது நான் ஜனங்கள் மத்தியிலே தங்கியிருக்க பிரியப்படுகிறேன். எனக்கு ஆசரிப்பு கூடாரத்தை உண்டு பண்ணு என்று சொன்னார் அல்லவா? இப்போது அவருக்கு ஆசரிப்பு கூடாரம் இல்லையே, அவருக்கு ஒரு ஆலயத்தை கட்ட பிரியப்படுகிறேன். ஒரு வாசஸ்தலத்தை உண்டாக்க பிரியப்படுகிறேன்.

என்னுடைய தாழ்விலே என்னை நினைத்த ஆண்டவருக்கு ஒரு பெரிய காரியத்தை செய்ய வாஞ்சிக்கிறேன். ஆகவே, என்னுடைய இறுமையிலும் நான் ஏராளம் பொன்னையும், வெள்ளியையும் என் அன்பு தெய்வத்திற்காக சேர்த்து வைத்திருக்கிறேன்.

என் ஆண்டவருக்கு ஒரு ஆலயத்தை கட்டி முடிக்கிற வரையிலும் என்னால் இந்த பெரிய அரண்மனையில் சந்தோஷமாக தூங்க முடியாது. கர்த்தருக்கு எப்படியாவது ஒரு வாசஸ்தலத்தை உண்டு பண்ணவேண்டும்.

என் உள்ளம் பொங்குகிறது. என் தாழ்விலே என்னை நினைத்த என் ஆண்டவருக்காக நான் எப்படியாவது ஆலயத்தை கட்டவேண்டும். அவர் செய்த எல்லா உபகாரங்களுக்கு பதிலாக நான் அவருக்கு என்னத்தை செலுத்துவேன்?

ராஜாவாகிய தாவீது கர்த்தருடைய ஆலயத்தை குறித்து பேசியதையெல்லாம் தீர்க்கதரிசியாகிய நாத்தான் கேட்டுக் கொண்டேயிருந்தார். ராஜாவைப் பார்த்து சொன்னார்: ராஜாவே உங்களுடைய இருதயத்தில் இருக்கிறபடியெல்லாம் தாராளமாய் செய்யும். கர்த்தர் உம்மோடுகூட இருக்கிறாரே.

நாத்தான் தீர்க்கதரிசி சொல்லிவிட்டு கொஞ்சம் தூரம் போனவுடன் கர்த்தர் நாத்தானோடு பேச ஆரம்பித்தார். என் தாசனாகிய தாவீது உன்னோடு பேசியதையெல்லாம் நான் கேட்டுக்கொண்டேயிருந்தேன். எனக்கு ஒரு ஆலயத்தை கட்ட வேண்டுமென்று என் தாசனாகிய தாவீது ஆசையோடும், சந்தோஷத்தோடும் சொல்லியதையெல்லாம் கவனித்தேன். என் ஆலயத்தின் மேல் தாவீதுக்கிருக்கிற பக்தி வைராக்கியத்தை நான் கண்டேன்.

தாவீது அநேக யுத்தங்களை செய்தபடியினால் அவன் அந்த ஆலயத்தை கட்ட வேண்டாம். ஆனால், தாவீதுக்கு ஒரு மகனை எழுப்புவேன். அவன் எனக்கு ஆலயத்தை கட்டியெழுப்புவான்.

ஆயினும் தாவீதின் வாஞ்சையை நான் அறிந்து அதற்கு தக்கதாக தாவீதை நான் ஆசீர்வதிப்பேன். எனக்கு ஆலயம் கட்ட வேண்டுமென்று அவன் வாஞ்சித்த தினால் நான் அவனுக்கு ஒரு வீட்டை கட்டுவேன். தாவீதின் வீடு என்றென்றைக்கும் நிலை நிற்கும். அவன் குமாரர் என்றென்றைக்கும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்கள்.

தாவீதின் வீட்டைப் பாருங்கள். அது கர்த்தருடைய வீடு. தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் வீடு. அந்த வீட்டின் திறவுகோல் எப்படியிருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

இன்றைக்கு கர்த்தர் சொல்லுகிறார். தாவீதின் வீட்டின் திறவுகோலை நான் உனக்கு தருவேன். ஆ! அது எத்தனை சந்தோஷமான காரியம். தாவீதின் குமாரனாகிய கிறிஸ்துவின் திறவுகோலை தருவது எத்தனை மகிழ்ச்சியான காரியம். தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் சிங்காசனம் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும்.

இன்று தாவீதின் நாட்கள் முடிந்துவிட்டது தாவீதின் பிள்ளைகளாகிய நாமே இருக்கிறோம். நாமே தாவீதின் சந்ததி. நாமே தாவீதைப்போல நடனம் ஆடி கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருகிறோம்.

தாவீதின் குடும்பத்திலே வந்த நம்மை கர்த்தர் பரிசுத்த ஆவியால் நிரப்பி ராஜாக்களாக அபிஷேகம் பண்ணியிருக்கிறார். தாவீதின் வீட்டின் திறவுகோலை நான் உனக்கு தருகிறேன். தாவீதுக்கிருந்த அந்த ஆளுகையை நான் உனக்கு கொடுக்கிறேன் என்கிறார்.

தாவீது ஆண்டவருக்காக ஆலயத்தை கட்டப்போகிறேன் என்றுச் சொன்னார். உடனே கர்த்தர் தாவீதின் வீட்டின் திறவுகோலை தாவீதுக்கு கொடுக்க சித்தமானார்.

சற்று ஆழமாய் பேச விரும்புகிறேன். தாவீதின் திறவுகோலைப் பெற நாம் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தை கட்டி எழுப்ப வேண்டும். எந்த ஆலயத்தை கட்டியெழுப்புவது?

கர்த்தர் கைகளினால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசம் பண்ணுகிறவரல்ல. தேவன் ஆவியாய் இருக்கிறார். அவரை தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுக்கொள்ள வேண்டும். அப்படியானால் எந்த ஆலயத்தை நாம் கர்த்தருக்கென்று கட்டுவது? ஆம், நாமே கர்த்தருடைய ஆலயம். நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? (I கொரி 3:16).

நாமே கர்த்தருடைய ஆலயம். நாம் கட்டியெழுப்ப வேண்டியது நம்முடைய பரிசுத்த வாழ்க்கையை. கர்த்தர் நம்மிலே வாசம் செய்ய விரும்புகிறார்.

இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார் (வெளி 21:3).

தேவபிள்ளையே, உன்னுடைய சரீரத்தை, உன்னுடைய வாழ்க்கையை கர்த்தருக்கென்று பரிசுத்தப்படுத்தி கொடு. ஆண்டவரே என் சரீரம் நீர் தங்குகிற பரிசுத்த ஆலயமாக விளங்கட்டும். உம்முடைய வசனத்தினாலும், இரத்தத்தினாலும் என்னைக் கழுவி சுத்திகரித்து, தேவரீர் எனக்குள் வாசம் செய்ய என்னை தகுதிப்படுத்தும் என்று ஒப்புக்கொடு. அப்பொழுது கர்த்தர் தாவீதின் வீட்டின் திறவுகோலை உனக்கு தருவார்.

சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை (ரோமர் 12:1).

தேவபிள்ளையே, நீ கர்த்தருடைய சொத்து. அவர் உன்னை தமக்கு சுதந்திரமாகக் கொண்டிருக்கிறார். உன்னை அவருக்கு பரிசுத்த ஆலயமாக ஒப்புக்கொடுப்பாயா?

அநேகர் தன் சரீரங்களை கர்த்தருடைய ஆலயம் என்ற உணர்வில்லாமல் தீட்டுபடுத்தி, கீழ்த்தரமான இச்சைகளுக்கும், காம விகாரங்களுக்கும் விற்றுப்போடுகிறார்கள். இதனால் இவர்கள் குடும்பங்களும், பிள்ளைகளும்கூட கர்த்தருடைய கோபத்திற்கும், சாபத்திற்கும் உரியவர்களாக வேண்டியதிருக்கிறது.

ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்

(I கொரி 3:17)

வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்துக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்கிறான்.

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?(I கொரி 6:18,19)

தேவபிள்ளையே, கர்த்தருடைய ஆலயத்தை கட்டி எழுப்பு. நிச்சயமாகவே, கர்த்தர் உன் வீட்டை கட்டியெழுப்புவார். தலைமுறை தலைமுறையாய் உன் வீடு ஆசீர்வதிக்கப்படும். இதோ, தாவீதின் திறவுகோலைப் பெற்றுக்கொள்.

உங்கள் ஜீவியமான ஆவிக்குரிய மாளிகையானது கிறிஸ்துவின் மேல் முழுவதும் இசைவாக கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக விளங்கட்டும் (எபே 2:21).

பூமியிலே நாம் கர்த்தருக்கென்று ஆலயத்தை கட்டுவோம் என்றால் நித்தியத்திலே நித்தியமான வீட்டை நமக்கு தந்தருளுவார். ஒரு நாள் நாம் பரலோகத்திற்கு செல்லும்போது அங்கே தாவீதின் வீட்டைக் காணலாம். நம்முடைய வாசஸ்தலங்களையெல்லாம் நாம் பார்ப்போம். ஆ! அந்த நாள் எத்தனை மகிழ்ச்சியான நாள்!

பரலோகத்தில் தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் சிங்காசனத்தை நாம் காண்போம். அது வெள்ளை சிங்காசனம். தூய்மையின் சிங்காசனம் அவரோடுகூட நாம் சிங்காசனங்களில் அமருவோம். தாவீதின் பிள்ளைகளாகிய நாம் அவரோடிருந்து நித்திய நித்தியமாய் களிகூருவோம். தாவீதின் வீட்டின் திறவுகோலை நான் உங்களுக்கு கொடுக்கிறேன் என்று கர்த்தர் வாக்களிக்கிறார். விசுவாசத்தோடு பெற்றுக்கொள்வோமாக!

3. மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்!

மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன் (வெளி 1:18).

மரணத்தின் முதுகெலும்பை முறித்த என் ஆண்டவர் சொல்லுகிறார்: நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன். ஆ அது நமக்கு எத்தனை ஆறுதல்! எத்தனை சந்தோஷம்! நான் மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்களை உடையவராக இருக்கிறதினால் நீ மரணத்தால் சேதப்படுவதில்லை. பாதாளத்தின் வாசல்கள் உன்னை மேற்கொள்ளுவதில்லை.

நம்முடைய தேவன் யார்? அநேகர் அவரை மகத்துவமுள்ள சர்வ வல்லமையுள்ள தேவனாக எண்ணுவதேயில்லை. ஆறடி உயரமுள்ள மனிதனாக, மரியாளின் மகனாக எண்ணு

கிறுர்கள். அவரை பிள்ளேபூச்சி பிடித்து விளேயாடுவதைப் போல அசட்டை பண்ணுகிறுர்கள். கிள்ளுக்கீரையாக நினேக்கிறுர்கள்.

ஆனுல், கர்த்தரோ வானம் எனக்கு சிங்காசனம், பூமி எனக்கு பாதப்படி என்று மகிமையின் ராஜாவாக ஏழு நட்சத்திரங்களே தன் கைகளில் ஏந்தினவரும், ஏழு குத்து விளக்குகளின் நடுவிலே உலாவுகிறவருமாக காட்சியளிக்கிறுர்.

அன்று கர்த்தர் சீஷனுகிய யோவானிடம் தன்னே வெளிப்படுத்தி நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களே உடையவராக இருக்கிறேன் என்றுச் சொன்னதற்கு காரணம் என்ன?

கர்த்தருடைய ஊழியத்தை செய்ததின் பொருட்டு யோவானே கைது செய்து பத்மு தீவுக்கு நாடு கடத்திஞர்கள். தனிமை சிறையிலே தள்ளி அங்கே கிடந்து சாகட்டும் என்று தண்டனே கொடுத்தார்கள்.

பத்மு தீவு ஏறக்குறைய நாற்பது மைல் குறுக்களவுள்ள கற்பாறைகளால் நிறைந்த சிறிய தீவாகும். அங்கு மரங்களோ, செடி, கொடிகளோ ஒன்றும் கிடையாது. ஒருவேளே யோவான் அங்கு சிறையிலே அடைக்கப்பட்டபோது இந்த தீவிலே நான் மரிக்க வேண்டியது தானே, இதுதான் என் முடிவோ என்று எண்ணியிருந்திருக்கக்கூடும், மரண பயம் வாட்டி வதைத்திருக்கலாம்.

மட்டுமல்லாமல், ''ஐயோ நான் தனிமையாய் இருக்கிறேனே. மற்ற அப்போஸ்தலர்களிடமிருந்தும், தேவனுடைய பிள்ளேகளிடமிருந்தும் பிரிக்கப்பட்டுவிட்டேனே. சுவிசேஷத்தின் வாசல்கள் அடைக்கப்பட்டு போனதே என்றெல்லாம் தவித்திருக்கக்கூடும்.

கர்த்தர் தம்முடைய சீஷனே கைவிடவில்லே. அவர் ஒருபோதும் நம்மை கைவிடமாட்டார். கர்த்தர் யோவானுக்கு பரலோக தரிசனத்தைக் கொடுத்

தார். கர்த்தர் சொன்னார்: மரித்தேன் ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்களை உடையவராக இருக்கிறேன். மரணத்தைக் குறித்து பயப்படாதே. பாதாளத்தைக் குறித்து கலங்காதே. பாதாளத்தின் வாசல்கள் உன்னை மேற்கொள்ளுவதில்லை. மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன் என்று பேசினார்.

இயேசு சிலுவையிலே மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிரோடு எழுந்திருக்கிற வரையிலும் மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல் சாத்தானுடைய கையில்தான் இருந்தது.

என்றைக்கு ஆதாமும், ஏவாளும் பாவம் செய்தார்களோ அன்றைக்கு அவர்கள் ஆத்துமாவில் மரணம் வந்தது. மட்டுமல்ல, மரணம் உலகத்தை சூழ்ந்துக் கொண்டது.

அவர்கள் சாத்தானுக்கு செவிகொடுத்ததினாலே சாத்தான் மரணத்திற்கு அதிபதியாகி மனுக்குலம் முழுவதையும் பிடித்து ஆளுகை செய்தான். வியாதிகளையும், நோய்களையும் கொண்டு வந்தான். பெலவீனங்களையும், துக்கங்களையும் கொண்டு வந்தான். சாபங்களையும், கோப வெறிகளையும் கொண்டு வந்தான். முழு உலகத்தையும் ஆண்டு கொண்டான்.

வெளிப்படுத்தல் 6:8-ஐ வாசித்துப் பாருங்கள். ''நான் பார்த்தபோது, இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன் பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது.''

பாருங்கள் மரணம் முன்னால் போகிறது, பின்னால் பாதாளம் போகிறது. பாதாளம் எப்படி போகிறது? ஆவென்று வாயை திறந்துகொண்டே போகிறது. மரணம் ஆத்துமாக்களை பிடித்துக்கொண்டு பாதாளத்திலே போடுகிறது. பாதாளம் விழுங்கிக் கொண்டே செல்கிறது.

கர்த்தர் மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்களை சாத்தானுடைய கைகளிலே இருந்து பிடுங்க விரும்பினார். ஆகவே, அவர் மரித்தபோது பாதாளத்திற்கு இறங்கி பூமியின் தாழ்விடங்களுக்கு சென்று சாத்தானின் தலையை நசுக்கினார். அவன் கைகளிலிருந்து மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்களை பிடுங்கி எடுத்தார். ஆம், நம் இயேசு ஜெயவேந்தர். அவர் வெற்றி சிறந்தவர். மரணமும் பாதாளமும் அவரை மேற்கொள்ள முடியவில்லை.

தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு ஜெயமுண்டு. மரணம் நம்மேல் ஆளுகை செய்ய முடியாது. பாதாளம் நம்மை மேற்கொள்ள முடியாது. நாம் மரணத்தை ஜெயமாக விழுங்குவோம். மரணத்தின் முதுகெலும்பை தட்டி மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்று வெற்றி முழக்கமிடுவோம். காரணம், நம் அருமை ஆண்டவருடைய கைகளில் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்கள் இருக்கிறது.

அவரே அக்கிரமங்களிலும், பாவங்களிலும் மரித்தவர்களை உயிர்ப்பிக்க வல்லமையுள்ளவர். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது கர்த்தர் மரண பயத்தினால் வாடுகிறவர்களை, மரண கண்ணிக்குள் சிக்கியிருக்கிறவர்களை விடுவித்துக் கொண்டுவருகிறார். அவர் திறவுகோல்களை உபயோகிக்கும்போது பாதாளம் தன் வல்லமையை இழந்து போகிறது.

சுவிசேஷத்திற்கு செவி கொடுக்காதவர்களின் மரணம் எத்தனை வேதனையானது! பாவத்தில் ஜீவித்து சுவிசேஷத்-

திற்கு காதுகளை அடைத்துக்கொண்டவர்கள் துக்கத்தோடு பாதாளத்திற்குள் இறங்குகிறார்கள்.

மரணத் தருவாயிலிருக்கும் அநேகரை நான் சந்தித்து இருக்கிறேன். கிறிஸ்து அற்ற மரணம் எத்தனை வேதனையானது! அவர்கள் நிம்மதியில்லாமல், எங்கு செல்கிறோம் என்று தெரியாமல், ஏதோ ஒரு பயங்கரமான காரிருளுக்குள் செல்லுவதை உணர்ந்து, ''ஐயோ, இந்த மரணத்தில் இருந்து என்னை யார் விடுதலையாக்குவார்கள்?'' என்று நடுக்கத்தோடு மரிக்கிறார்கள்.

ஆனால், தேவனுடைய பிள்ளைகளின் மரணம் ஆனந்தமானது. அவர்கள் மரணத்தைக் குறித்து கலங்குவதில்லை.

கர்த்தர் இன்று மரணத்தின் திறவுகோல்களை நம்முடைய கைகளிலே கொடுத்து மரணத்திற்கு நியமிக்கப் பட்டவர்களை கூடுமானால் விடுவி என்றுச் சொல்லுகிறார். மரண கண்ணிகளுக்கு கட்டளை கொடுத்து, அவர்களை அங்கேயிருந்து மீட்டுக்கொள் என்றுச் சொல்லுகிறார்.

சாரிபாத் விதவையின் மகன் மரித்தபோது எலியா அவள் மகனை உயிரோடு எழுப்பினதை I இராஜாக்கள் 17-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அதுபோலவே சூனேமியாளின் பிள்ளை மரித்தபோது எலிசா அந்தப் பிள்ளையை உயிரோடு எழுப்பி கொடுத்தார். எலிசாவின் மேல் இரட்டிப்பான அபிஷேகம் இருந்ததினாலே எலிசாவின் எலும்பு பட்டபோதுகூட மரித்த மனிதன் உயிரோடு எழுந்தான்.

இயேசு பூமிக்கு வந்தபோது நாயீனூர் விதவையின் மகனின் பாடையைத் தொட்டு, வாலிபனே எழுந்திரு என்றுச் சொன்னார். மரித்த அவன் உயிரோடு எழுந்தான். யவீருவின் மகளை உயிரோடு எழுப்பினார். மரித்த லாசருவைப் பார்த்து லாசருவே எழுந்திரு என்றுச் சொன்னபோது லாசரு உயிரோடு எழுந்தார்.

நம் ஆண்டவருடைய சுவிசேஷம், மனிதனை உயிரோடு எழுப்பிக்கொடுக்கும் சுவிசேஷம். மரணத்தையும் பாதாளத்தையும் திறக்கும் சுவிசேஷம்!

இயேசுகிறிஸ்து ஒருநாள் தன்னுடைய சீஷர்களையெல்லாம் தம்மண்டை அழைத்தார். அவர்களுக்கு அதிகாரத்தை கொடுத்தார். வல்லமையை கொடுத்தார், சகல வியாதிகளையும் சொஸ்தமாக்குகிற வல்லமை, பிசாசுகளை துரத்துகிற வல்லமை, குஷ்டரோகிகளை சொஸ்தமாக்குகிற வல்லமை. எல்லாவற்றிற்கும் மேலாக அவர் சொன்னார் மரித்தோரை எழுப்புங்கள்.

மரித்தோரை எழுப்புங்கள். அக்கிரமங்களிலும், பாவங்களிலும் மரித்துக் கிடக்கிறவர்களை உயிர்ப்பியுங்கள். சுவிசேஷத்தின் திறவுகோல் கொண்டு மரணத்தின் வல்லமையை கட்டுங்கள்.

அன்றைக்கு சீஷர்கள் இந்த திறவுகோல்களை தங்கள் கைகளில் ஏந்தினார்கள்.

தொற்காள் எனப்பட்ட தபீத்தாள் வியாதிப்பட்டு மரித்துப்போனாள். அவளை குளிப்பாட்டி, மேல் வீட்டிலே கிடத்தி வைத்திருந்தார்கள். பேதுரு எல்லாரையும் வெளியே போகச் செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள் (அப் 9:40).

நம் தேவன் தம் பிள்ளைகளின் ஜெபத்தைக் கேட்டு மரணத்தின் திறவுகோலால் மரண வாசலை திறந்து, ஜீவனை வெளியே கொண்டு வந்து சரீரத்தை உயிர்ப்பிக்கிறார்.

ஐத்திகு என்னும் பெயருள்ள வாலிபன் மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து மரித்தவனாய் எடுக்கப்பட்டான். உடனே அப்போஸ்தலனாகிய பவுல் அவன் மேல் விழுந்து அவனை உயிர்ப்பித்தார். அவன் உயிர் அவனுக்குள் திரும்பி வந்தது. அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாகக் கூட்டிக் கொண்டுவந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள் (அப் 20:12).

போதகர் பால் யாங்கி சோ அவர்களுடைய ஆலயத்திற்கு மூன்று முறை செல்ல கர்த்தர் கிருபை செய்தார். அவருடைய ஆலயம் கொரியாவில் சியோல் பட்டணத்தில் இருக்கிறது. உலகத்திலேயே மிகப் பெரிய ஆலயம் அது தான். அவருடைய இரண்டாவது மகன் ஒரு ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு வீட்டிற்கு வந்தபோது மரித்தவனாக விழுந்தான். காரணம், அந்த சாப்பாட்டில் விஷம் இருந்தது. மகனுடைய மரண செய்தி கேட்டவுடன் அவர் தன் வீட்டிற்கு விரைந்து ஓடிவந்தார்.

தன்னுடைய மகன் மேல் விழுந்து ஜெபித்தார். இயேசுவின் நாமத்தினாலே மரணத்திற்கும் பாதாளத்திற்கும் திறவுகோல்களை உடைய கிறிஸ்துவின் வல்லமையினாலே நீ உயிரோடு எழுந்து வா என்று சொன்னபோது அந்த சிறுவன் அப்படியே உயிரோடு எழுந்தான்.

மகன் அப்பாவைப் பார்த்து சொன்னான்: அப்பா, ஏன் என்னைக் கூப்பிட்டீர்கள்? இயேசுவோடு பரலோகத்தில் சந்தோஷமாக இருந்தேனே. நீங்கள் கூப்பிட்ட சத்தம் பரலோகம் வரை கேட்டது. உங்கள் சத்தத்தைக் கேட்டு கர்த்தர் என்னை மீண்டும் பூமிக்கு அனுப்பினார் என்றான்.

தேவபிள்ளையே, ஆத்துமாவை உயிர்ப்பிக்கிற வல்லமை இந்த சுவிசேஷத்திற்கு உண்டு. இன்று கர்த்தர் மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோலை உன்னுடைய கையிலே கொடுக்கிறார்.

பாவத்தின் தோஷத்தால் மரித்துக்கிடக்கிற சமுதாயத்தை உயிர்ப்பிக்கிற வல்லமையை பெற்றுக்கொள். திறவுகோல்களைப் பெற்றுக்கொள். பாவம் செய்கிற ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கிற வல்லமையை பெற்றுக்கொள்.

கர்த்தர் இன்றைக்கு மூன்று திறவுகோல்களை நமக்கு வாக்கு பண்ணியிருக்கிறார். இன்றைக்கே அவைகளை நாம் பெற்றுக்கொள்ளுவோமாக! பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்கள், தாவீதின் வீட்டின் திறவுகோல்கள், மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்கள். ஆமென்!

அல்லேலூயா!!

ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்துமா பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 315 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. சாம் ஜெபத்துரை அவர்கள் இந் நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அனேக ஆவிக்குரிய புஸ்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசிர்வதிப்பாராக!

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம் :
J. சாம்ஜெபத்துரை, M.A.
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.